### தங்கச்சிமடம் – குந்துகால் – பாம்பன் வடக்கு மீனவக் கிராமங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்கு – முதல்வர் ரூ.360 கோடி ஒதுக்கீடு!

# மீனவர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிய - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகிகள் – முதல்வரை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

### இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது – நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.20-**

**தங்கச்சிமடம் மீன் இறங்கு தளம் மீன்பிடித் துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, தங்களது பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்து, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.2.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களான இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்க ஆலோசகர் என்.தேவதாஸ் மற்றும் பாய்வா, ஏ.பி.முருகன், தங்கச்சிமடம் அனைத்து விசைப்படகு நாட்டுப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் வி.பி. சேசுராஜா, பொருளாளர் ஆர்.சகாயம், இணை செயலாளர் பி. ஆல்வின், பாம்பன் நாட்டுப்படகு மீனவர் நல உரிமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.பி. ராயப்பன், நிர்வாகி ஆரோக்கிய தீபக், மண்டபம் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள் ஜாகீர் உசேன், வாசீம், விஜின் ஆகியோர் சந்தித்து, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், மீனவர்களின் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வதையும் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பின் போது, முதலமைச்சர் அவர்கள், மீனவச் சமுதாய மக்களின் கோரிக்கையினை ஏற்று,

18-8-2023 அன்று மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் பங்கேற்றபோது அளிக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று, அது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகளை அந்த மாநாட்டிலேயே அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்புகளை நிறைவேற்றும் வகையில், மீனவ மக்களுக்கான கூட்டுறவு கடன் திட்டத்தின் கீழ் 77,402 நபர்களுக்கு 1,198.79 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 6,242 மீனவர்களுக்கு வீடுகளுக்கான பட்டா வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி தடைக்காலத்திற்கான நிவாரணத்தொகை ரூ.8000/ மாக உயர்த்தப்பட்டு, 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்கள் உட்பட 1.80 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு 143 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி படகுகளுக்கான மானிய விலையிலான டீசல் விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், நாட்டுப்படகுகளுக்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் மற்றும் மண்ணெண்ணெய் 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராகவும் உயர்த்தப்பட்டு நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி படகுகளுக்கு 1,000 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன, மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம் செயல்பாட்டில் இல்லாத காலகட்டத்தில் இறந்த 205 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் சுழல் நிதியமாக ரூ 3.53 கோடி வழங்கப்பட்டுள்ளது, மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது ரூ. 1.70 இலட்சத்திலிருந்து ரூ. 2.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்றும்;

அதேபோன்று, இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களின் முக்கிய கோரிக்கைகளான தங்கச்சிமடம் மீன் இறங்கு தளம் மீன்பிடி துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய திட்ட செயல்பாட்டிற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்;

அதன் அடிப்படையில், இதுபோன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாத நிலையிலும், தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மீனவக் கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக கடலோர மேலாண்மை திட்ட வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும், இப்பிரச்சனையில் நிரந்தரத் தீர்வினைக் காண வேண்டுமென்று பலமுறை ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதோடு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தியதோடு, தொடர்ந்து இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

மீனவர்கள் சார்பில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் 16.2.2025 அன்று இராமநாதபுரத்தில் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுடன், தற்போது முதலமைச்சர் அவர்களிடம் இன்றைய தினம் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடற்பாசி வளர்த்தல், மதிப்புக் கூட்டிய மீன் பொருட்கள் தயாரித்தல், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் விரைந்து பரிசீலிக்க துறை அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மீனவர்களின் உற்ற தோழனாக விளங்கும் திராவிட மாடல் அரசு, தொடர்ந்து மீனவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, நிச்சயம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், தங்களது பல்வேறு பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதற்காக தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாநில மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஜோசப் ஸ்டாலின், துணைச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், ராமவன்னி, வீ.பொன்னரசு ஆகியோர் உடனிருந்தனர்.

## கலைஞரின் கருத்தோவியம்



"**மொ**ழி ஊடுருவல்"
முளையிலேயே கிள்ளி எறிய
வேண்டியதாயிற்றே,

கொஞ்சம் வளர
விட்டாலும் நாட்டின் எல்லா
துறைகளிலுமே அது நஞ்சினைக்
கலந்து விடுமே,

நாளாவட்டத்தில் நம்
செந்தமிழையே
சிதறிடச் செய்திடும்!

நம் வருங்கால
வழித்தோன்றல்களையும்
வழி மாற வைத்துவிடுமே!



நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் அகரகொந்தகை ஊராட்சி வாழ்மங்கலம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் அரசுப்பள்ளிகளின் கட்டமைப்புகளை சரிசெய்தல், புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் இரண்டு வகுப்பறை கட்டடத்தினை மாவட்ட பொறுப்பு அமைச்சர் – பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழக தலைவருமான என்.கௌதமன், திருமுருகன் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன் ஆகியோர் உள்ளனர்.




கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன் வரவேற்பில் ஆவூரில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைக் கழக பேச்சாளர் ஜெ.அசரப் அலி, கழக இளம் பேச்சாளர் தமிழினியன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். நிகழ்வில் மாநில கழக நிர்வாகிகள் த.சந்திரசேகர், கே.ஆர்.என்.போஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, எம்.லியாகத் அலி, தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றியச் செயலாளர்கள் அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, சாந்தி தங்கசிங்கம், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், எம்.பாலமுருகன், எஸ்.டி.கண்ணன், எம்.செல்லதுரை, பூங்குடி எம்.சிவா, ஆர்.நேரு, அ.முத்துச்சாமி, எம்.கலைவாணன், எஸ்..சுரேஷ், மண்டையூர் மகேந்திரன், தேவராஜ், நல்லூர் விஜயகாந்த், இராஜா ஸ்டாலின், எழில் ராஜா, முத்தழகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி பி.சிவா நன்றி கூறினார்.

### தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திட

# ஒன்றிய அரசின் பங்குத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் விடுவித்திடுவீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய மகளிர் – குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, பிப். 20 -**

**தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஒன்றிய அரசு தனது பங்குத் தொகையை, குறிப்பிட்ட காலத்திற்குள் விடுவித்திட வேண்டுமென்று வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி அவர்களுக்கு நேற்று முன்தினம் (18.2.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் 31.01.2025 ஆம் நாளிட்ட கடிதத்தில், திறன்மிகு குழந்தைகள் மையம் (Mission Saksham Anganwadi & POSHAN 2.0), மகளிர் சக்தி இயக்கம் (Mission Shakthi) மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் திட்டம் (Mission Vatsalya) போன்ற ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்களுக்கு, 2912025ஆம் நாள் நிலவரப்படி ரூ.716.05 கோடி செலவழிக்கப்படாமல் உள்ளது எனத் தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் அனைத்து நலத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், ஒன்றிய அரசு நிதியுதவி வழங்கும் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்களிப்பு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முறையாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான நேர்வுகளில், ஒன்றிய அரசின் நிதிப்பங்கு காலாண்டின் இறுதியிலோ அல்லது அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டிலோ மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நிதியாண்டின் முடிவிற்குள் ஒன்றிய அரசு ஒதுக்கும் தொகையை மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்குக் குறுகிய காலத்திற்குள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) என்னும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 304 கோடி ரூபாயில், ஒன்றிய அரசின் பங்குத் தொகையான 184 கோடி ரூபாய் இது நாள் வரை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதால், பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் உரிய காலத்தில் வரவு வைக்க இயலாமல் உள்ளதையும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார். நேற்றைய தேதியில், ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (Single Nodal Agency) கணக்குகளில் உள்ள 576.22 கோடி ரூபாயில், இந்த நிதியாண்டு முடிவதற்குள்

ரூ.482.80 கோடி பயன்படுத்தப்படும் என்றும், மீதமுள்ள தொகை ஒன்றிய அரசின் பங்காக அடுத்த நிதியாண்டுக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான பங்குத் தொகையை, குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது அந்தந்த நிதியாண்டுக்குள்ளேயே விடுவித்திட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக இளைஞரணி அமைப்பாளராக பொம்மிடி ஊராட்சியைச் சார்ந்த சானவாஸ் துணை அமைப்பாளர்களாக பி.பள்ளிப்பட்டி தினேஷ், தமிழ்நெஞ்சன், பூதநத்தம் ராகுல்,மெணசி தினேஷ், போதக்காடு விருதாசலம், பையர்நத்தம் நரேஸ்வர்மா ஆகியோர் நியமனம் செய்யப்பட்டதை அடுத்து தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்று வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் கழகதலைவரின் ஆணைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைபடி பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற பாடுபடுவோம் என தெரிவித்தனர்.